பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

08 10 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஹிமாச்சலப்பிரதேசத்தில் பேருந்து ஒன்று நிலச்சரிவில் சிக்கியதில் அதில் பயணம் செய்த 15 பேர் உயிரிழந்தனர்.

   *இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

2. பயிர்க்கழிவுகளை எரிப்பதால், தில்லியில் ஏற்படும் காற்று மாசைத் தடுக்க, நீடித்த முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்று, மத்திய அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

3. தூய்மை இந்தியா இயக்கத்தில், கழிவுகளிலிருந்து வருவாய் ஈட்டுவதற்கான புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துமாறு மத்திய இணையமைச்சர் திரு.ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer இரண்டு நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

5. UGC நெட் தேர்வுக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தின் பிலாஸ்பூர் மாவட்டத்தில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் பேருந்து ஒன்று சிக்கியதில் அதில் பயணம் செய்த 15 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

பேருந்தில் பயணம் செய்த 15 பேர் பத்திரமாக மீட்கப்பட்டதாக அம்மாநில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தோருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அம்மாநில முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுகு ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

**<<<<>>>>**

பயிர்க்கழிவுகளை எரிப்பதால், தலைநகர் தில்லியில் ஏற்படும் காற்று மாசைத் தடுக்க, தொடர்ந்து நீடித்த முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து, வட மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்திய அவர், தில்லியின் காற்று மாசைக் கட்டுப்படுத்த இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

கூட்டத்தில் பேசிய மத்திய சுற்றுச் சூழல் துறைஅமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ், மத்திய வேளாண் அமைச்சகத்திற்கும், மாநில அரசுகளுக்குமிடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இந்தக் கூட்டத்தில், பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேச மாநிலங்களின் வேளாண் அமைச்சர்கள் மற்றும் தில்லி யூனியன் பிரதேச சுற்றுச்சூழல் துறை அமைச்சர் உள்ளிட்டோர் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தின் டார்ஜிலிங் மலைப் பகுதியில், பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று, மத்திய அமைச்சர் திரு.கிரன் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

சமீபத்திய மழை-வெள்ளத்தால், டார்ஜிலிங் மாவட்டத்தின் Bagdogra மற்றும் Mirik பகுதிகளில், வீடுகள், சாலை மற்றும் பாலங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை மதிப்பீடு

செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில அரசுடன் இணைந்து, கூடுதல் உதவிகள் வழங்கப்படும் என்றார்.

இன்று, Bijanbari பகுதியைப் பார்வையிடவுள்ள திரு.கிரன் ரிஜிஜு, தில்லி திரும்பியதும் தமது ஆய்வு குறித்து மத்திய அரசிடம் அறிக்கை தாக்கல் செய்ய இருப்பதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

தூய்மை இந்தியா இயக்கத்தில், கழிவுகளிலிருந்து வருவாய் ஈட்டுவதற்கான புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்த வேண்டுமென்று, மத்திய அறிவியல் - தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு.ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

மருத்துவப் பரிசோதனை மையக் கழிவுகளை சேகரித்து, புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, உடலுக்குத் தீங்கு விளைவிக்காத பொருட்களாக மாற்றுவதற்கான, எய்ம்ஸ் மருத்துவமனையின் திட்டத்தைத் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அன்றாட வாழ்வில், தூய்மையை ஒரு பழக்கவழக்கமாக பின்பற்றும் வகையில், மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தூய்மையான மற்றும் பசுமையான சுற்றுச்சூழலை உருவாக்குவதோடு, ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் பணி நடைமுறைகளைப் புகுத்துவதன் மூலமே, தூய்மை இயக்கத்தின் முயற்சிகள் பலனளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எய்ம்ஸ் மருத்துவமனையின் இந்த புதிய முன்முயற்சி, நாடு இறக்குமதிகளை சார்ந்திருக்கும் நிலையைத் தவிர்த்து, உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் சுயசார்பு நடைமுறைகளை வலுப்படுத்துவதாக இருக்கும் என்றும் திரு.ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

**<<<<>>>>**

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம், அடுத்த நிதியாண்டில் 6 புள்ளி 5 சதவீதமாக இருக்குமென்று, உலக வங்கி தெரிவிதுதுள்ளது.

கடந்த ஜூன் மாதம் வெளியிட்ட அறிக்கையில், இது 6 புள்ளி 3 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்ட நிலையில், உள்நாட்டுத் தேவை அதிகரிப்பு, கிராமப்புற பொருளாதார வளர்ச்சி போன்றவற்றுடன், சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களின் பலனாக, உள்நாட்டு உற்பத்தி வீதம் மேலும் அதிகரிக்கக் கூடும் என்று, தெற்காசிய வளர்ச்சி குறித்த உலக வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், உலகின் வேகமாக வளரும் பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த தெற்காசியாவின் வளர்ச்சி, நடப்பு நிதியாண்டில் 6 புள்ளி 6 சதவீதமாக இருக்கும் என்றும், அதேவேளையில், செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால், உலகளாவிய நிச்சயமற்ற சூழல் ஏற்படுவதுடன், வேலைவாய்ப்பும் பாதிக்கப்படக்கூடும் என்பதால், அடுத்த நிதியாண்டின் வளர்ச்சி 5 புள்ளி 8 சதவீதமாக குறையக்கூடும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு.நரேந்திர மோடி, மகாராஷ்டிராவில் இன்று சுமார் 32 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாள் பயணமாக மகாராஷ்டிரா செல்லும் பிரதமர், நவி மும்பையில், 19 ஆயிரத்து 650 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் மிகப்பெரிய பசுமை விமான நிலையத்தைத் தொடங்கி வைக்க உள்ளார்.

அதனைத் தொடர்ந்து, ஆண்டுக்கு 90 மில்லியன் பயணிகளையும் முன்று மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளையும் கையாளும் திறன் கொண்ட நவி மும்பை விமான நிலையம், மும்பை மாநகரின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாகத் திகழும்.

இதனைத் தொடர்ந்து, 12 ஆயிரத்து 200 கோடி மதிப்பீட்டிலான மும்பை மெட்ரோ ரயிலின் இரண்டாவது கட்ட விரிவாக்கத்தை பிரதமர், நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

பின்னர், நாட்டின் முதலாவது ஒருங்கிணைந்த பொதுப் போக்குவரத்து செயலியான "மும்பை ஒன்" செயலி மற்றும், அம்மாநிலத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பள்ளிகளில் செயல்படுத்தப்பட உள்ள குறுகிய கால பயிற்சித் திட்டத்தை-யும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

நாளை, இங்கிலாந்து பிரதமர் Keir Starmer-ஐ சந்தித்துப் பேச உள்ள பிரதமர் திரு.நரேந்திர மோடி, இருநாடுகளுக்கு இடையிலான நீடித்த ஒத்துழைப்பு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

<<<<>>>>

இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer இரண்டு நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் இங்கிலாந்து பிரதமர் மும்பையில் நாளை நடத்தவுள்ள பேச்சுவார்த்தையின்போது இரு நாடுகளுக்கு இடையிலான நீடித்த ஒத்துழைப்புகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2035ஆம் ஆண்டுக்கான தொலைநோக்கு கொள்கை குறித்தும் இரு தலைவர்களும் விவாதிக்க இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து மும்பையில் நடைபெறும் சர்வதேச நிதி தொழில்நுட்ப மாநாட்டிலும் இங்கிலாந்து பிரதமர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ள இருப்பதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

UGC நெட் தேர்வுக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிவிப்பில், இத்தேர்வுகள் வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியராக பணியாற்றுவதற்கும் Ph.D., வகுப்புகளில் சேர்வதற்கும் இத்தேர்வில் வெற்றி பெறுவது அவசியம் என்றும் தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான Buildathon போட்டியில் பங்கேற்க பெயர் பதிவு செய்வதற்கான கால அவகாசத்தை, மத்திய கல்வி அமைச்சகம், வருகிற 11-ந் தேதி வரை நீட்டித்துள்ளது.

6 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களிடையே புதுமை கண்டுபிடிப்பு முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்கில், அடல் புதுமை கண்டுபிடிப்பு இயக்கம் மற்றும் நித்தி ஆயோக்குடன் இணைந்து, இந்தப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள், குழுவாக இணைந்து, புதிய படைப்புகள் குறித்து சிந்தித்து, புதிய கருத்துக்கள் மற்றும் புதிய மாதிரிகளை உருவாக்குவதை, இந்தப் போட்டி ஊக்குவிக்கும் என்று, கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் வெற்றி பெறும் மாணவர் குழுக்களுக்கு ஒரு கோடி ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

அத்துடன், சம்பந்தப்பட்ட மாணவர்களும், அவர்கள் பயிலும் பள்ளிகளும், கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள தொடர் ஆதரவு அளிக்கப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

கிரீஸ் நாட்டில் இன்று தொடங்கும் உலக துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் 12 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது.

ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் Skeet மற்றம் Trap பிரிவுகளிலும், கலப்பு இரட்டையர் Trap பிரிவிலும் இந்திய வீரர், வீராங்கனைகள் களமிறங்குகின்றனர்.

-------------

ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anmol Kharb காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஃபின்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர், சீன தைபேயின் Lin Hsiang-Ti-யை 23-21, 11-21, 21-18 என்ற செட் கணக்கில் வென்றார்.

இன்று நடைபெறும் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், சீன தைபேயின் Wen Chi Hsu-வை எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென் மற்றும் கிடாம்பி ஸ்ரீகாந்த் ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

<<<<The End>>>>